மாலைமணி
ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ
சுடுகாட்டுச
சாம்பல்
- பி.எஸ்.இளங்கோ -
Anand

மாலைமணி!
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 1 | 30—8—59 | ஒலி 46

உணவு மந்திரி ராஜினமா!
சென்னை மந்திரிகள்
என்ன செய்யப் போகிறார்கள்?

மத்திய சர்க்கார் உணவு மந்திரி திரு. அஜீத் பிரசாத் ஜெயின் தமது பதவியை ராஜினமா செய்துவிட்டு, அதற்கான காரணங்களை விளக்கி மக்கள் சபையிலும் நீண்டதொரு சொற்பொழிவும் செய்திருக்கிறார்!

உணவு மந்திரி திரு. ஜெயின் அவர்களுடைய பேச்சு காங்கிரஸ்காரர்களின் திறமைக் குறைவையும், காங்கிரஸ் சர்க்காரின் கண்மூடித்தனமான போக்கையும் நன்கு படம் பிடித்துக் காட்டி இருக்கிறது!

உணவு மந்திரியின் பேச்சிலிருந்து காங்கிரஸ் சர்க்கார் உணவுப் பொருள்களின் பஞ்சத்தை நீக்க, உணவுப் பொருள்களின் விலையேற்றத்தைத் தடுக்க கொஞ்சமும் பாடுபட்டதாகத் தெரியவில்லை! உணவுப் பஞ்சத்திற்கும், உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்திற்கும் சர்க்காரே முக்கிய காரணம் என்று கூடச் சொல்லலாம்!

"உணவுப் பொருள் கொள்கையில் மந்திரி சபையிலேயே கருத்து வேற்றுமை இருந்தது!"

"சர்க்கார் மேற்கொண்ட உணவுப் பொருள் வியாபாரம் வெற்றியடையவில்லை!"

"கட்டுப்பாடுகள் சரியான முறையில் அமுல் செய்யப் படவில்லை!"

"சரக்குகளை சர்க்கார் கைப்பற்ற முயன்றால் சரக்கே மறைந்து விடுகிறது!"

"தற்போதுள்ள சிக்கலான பொருளாதார அமைப்பில் வினியோகம், கிராக்கி மட்டும் விலையை நிர்ணயிக்கவில்லை. இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கை, சர்க்கார் வரவு—செலவு கணக்கு நிதிக் கொள்கை இவற்றையும் பொருத்ததாகும்!"

ராஜினமாசெய்த உணவு மந்திரி திரு. அஜீத் பிரசாத் ஜெயின் மேற்கண்ட கருத்துக்களை மக்கள் சபையில் எடுத்து வைத்திருக்கிறார்!

வெள்ளைக்காரனைத் திறமையற்றவன் என்று கூறி அவனை விரட்டியடித்த காங்கிரஸ் வீரர்கள் எப்படி நாட்டை குட்டிச் சுவராக்கி வருகிறார்கள் என்பதை காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மந்திரியே விளக்கமாக எடுத்துக் காட்டி இருக்கிறார்.

ராஜினமா செய்த மந்திரி தனது நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்த போது சொன்ன ஒரு வாசகத்தை கீழே வைக்கிறோம்! பொது மக்கள் ஒரு தடவைக்குப் பல தடவைப் படித்து—காங்கிரஸ் கட்சியின் உண்மை நிலையை பற்றி அறிந்து கொள்ளட்டும்!

"யாரும் செயலாற்ற கஷ்டமாகவுள்ள ஒரு நிலைமையில் என்னலான எல்லாவற்றையும் செய்ய முயன்றேன்! இதை விட மேலும் நான் கூற விரும்பவில்லை! அப்படி ஏதாவது கூறினல் சர்க்காருக்கும் எனது கட்சிக்கும் ஒரு தர்ம சங்கடத்தை உண்டு பண்ணும்!

ராஜினமா செய்த உணவு மந்திரி தமது நண்பர்களிடம் இவ்வாறு கூறி இருக்கிறார்!

"யாரும் செயலாற்ற கஷ்டப்படும் ஒரு நிலைமையில்" என்கிறார் உணவு மந்திரி! பொது மக்களே! அப்படியென்றால் என்ன பொருள்? என்ன அர்த்தம்! காங்கிரஸ் மந்திரிகள் அனைவரும் செயலாற்ற கஷ்டப்படுகிறார்கள் என்று தானே இதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும்! அப்படியென்றால் பதவிக்காகவும் சுயநலத்திற்காகவும் தானே காங்கிரஸ் கட்சி பாடுபட்டு வருகிறது!

"இதற்குமேல் சொல்ல விரும்பவில்லை! அப்படிச் சொன்னல் சர்க்காருக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் தர்ம சங்கடமான நிலை ஏற்படும்" என்றும் கூறி இருக்கிறார்!

டில்லியிலே அமர்ந்து கோலோச்சும் மந்திரிகளும் அந்த மந்திரிகள் இருக்கும் காங்கிரஸ் கட்சியும் செய்துள்ள அயோக்கியத் தனங்களையும், முறைகெட்ட செயல்களையும் சொன்னல் தர்மசங்கடமான நிலை ஏற்படும் என்று தானே கூறி இருக்கிறார்!

உணவு மந்திரியின் பேச்சை கவனிக்கும்போது காங்கிரஸ் மந்திரி சபை மிக பயங்கர காரியங்களை செய்திருக்கும் என்று தானே எண்ண வேண்டி இருக்கிறது!

இந்த நிலையில் தான் சென்னை அமைச்சர்கள் காங்கிரஸ் கட்சியின் சாதனைகளை மக்களிடம் பிரமாதமாக எடுத்துக் கூறி வருகின்றனர்!

கனம் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் "எங்களைப் போல் திறமைசாலிகள், சுயநலமில்லா தியாகிகள் உலகத்தில் உண்டோ' என்று பறைசாற்றுகிறார்!

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாடுபடுவதாக நமது நிதி அமைச்சர் தம்பட்டம் அடித்து வருகிறார்! மத்திய சர்க்கார் உணவு மந்திரியோ "யாரும் உழைக்க முன்வரவில்லை" என்று கூறுகிறார்! இதில் எது உண்மை? எது பொய்?

உணவுப் பொருள்களின் பயங்கர நிலையைக் குறித்து நாடே கதி கலங்கி இருக்கிறது! ஊரே அதிர்ந்து போய்க் கிடக்கிறது! மத்திய மந்திரி சபையிலேயே பிளவு ஏற்பட்டு சின்னபின்னமாகி கிடக்கிறது!

சென்னையிலோ உணவுப் பொருள்கள் திருப்திகரம் என்று சொல்லுகிறார்கள்! உற்பத்தி ஆகாய விமான வேகத்தில் பெருகி விட்டதாகக் கூறுகிறார்கள்! இந்த வெத்து வேட்டுகளையும் சிலர் நம்பி காங்கிரஸ் கட்சியை ஆதரித்து வருகின்றனர்!

உணவுப் பொருள்கள் நிச்சயமாக நம் நாட்டில தேவைக் கேற்ப உற்பத்தியாக வில்லை! பற்றாக்குறையில் தான் நாம் இருக்கிறோம்! இந்த நிலையில் சர்க்கார் கட்டுப்பாடு விதிப்பதோ, கடை வைத்து வியாபாரம் செய்வதோ ஒரு நயா பைசா அளவு கூட பயன் தராது!

இந்தியத் துணைக்கண்டத்தில் உணவுப் பொருள்கள் மிகுதியாக உற்பத்தியாகும் வரை வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டும்! இதை விட்டுவிட்டு "இது சுதந்திர நாடு, யாரிடத்திலும் கையேந்தாது" என்று பெருமை பேசுவது எள்ளளவும் பயனளிக்காது!

இதை காங்கிரஸ் மந்திரிகள் உணரவேண்டும்!

உணவுப் பஞ்சத்தை சமாளிக்க முடியாத நிலையில் பதவியில் நீடிப்பது கூடாது எனக் கருதி மத்திய உணவு மந்திரி ராஜினமா செய்து விட்டார்!

அதே போல் தென்னகத்தின் வாட்டத்தைப் போக்க முடியாது வாய் வீச்சால் காரியத்தை சாதித்து வரும் நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியமும், முதலமைச்சர் கனம் காமராஜரும், மற்ற மற்ற மந்திரிகளும் ராஜினமா செய்துவிட்டு வெளியேறுவார்களா? இல்லை என்றால் உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க முன்வருவார்களா?

கரூரில்
மாலைமணி, அமிர்தம்
பத்திரிகைகளின் விற்பனையாளர்
கே. என். குப்புசாமி
பாரதியார் தெரு, கரூர்.

மாட்டுப் பெட்டியில் ஓட்டளித்த புதுச்சேரி மக்களே!

கேளுங்கள்!

கப்பற்படைக் கருவி வாங்கியதில் நஷ்டம்

17,00,000

கிடைக்காத இடத்திற்கு கொட்டிக் கொடுத்தது

4 இலட்சம்

கேளுங்கள்!

பாலைக் குளிர வைக்கும் கருவி வாங்கியதில் அரோகராவானது

3,80,000

டெண்டர் கோராமல் ஒப்பந்தம் செய்யப்பட்ட வகையில் பாழ்

2 இலட்சம்

பொய்க் கணக்கு எழுதினார்களாம்! அதில் எத்தனை இலட்சம் நஷ்டமோ?

புதுச்சேரி மக்களே!

உங்களுக்கு நீண்டதொரு மடல் தீட்ட வேண்டும் என்று நீண்ட நாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தோம்! அந்த ஆசையை இன்றுதான் எங்களால் நிறைவேற்ற முடிந்திருக்கிறது!

புதுவை மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆளும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு விட்டது! திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை! புதுவை மக்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து மகுடம் சூட்டி இருப்பதைக் கண்டு நாங்கள் பொருமைப்படவில்லை! பொச்செரிப்பும் கொள்ளவில்லை! ஆனால் தங்களுடைய வருங்கால வாழ்வுக்கு நலல பாதுகாப்பைத் தேடிக் கொள்ளாமல் ஏமாந்து விட்டீர்களே என்று நினைக்கும் போதுதான் எங்களுடைய உள்ளம் கொதிக்கிறது!

சுயநலமே உருவாகக்கொண்ட சில காங்கிரஸ்காரர்கள், தங்கள் சுயநல வாழ்வுக்காகவே கூறப்பட்ட சில பசப்பு வார்த்தைகளை நம்பி, அவர்கள் செய்த சில கைம்மாறுகளை நினைத்து ஓட்டளித்து விட்டீர்கள்! நாளைய வாழ்வைப் பற்றி, நாளைய நலனைப்பற்றி கொஞ்சமும் எண்ணிப் பார்க்க மறந்து விட்டீர்கள்!

தமிழகத்திலும், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி ஏறத்தாழ பன்னிரெண்டு ஆண்டுகள்வரை ஆட்சி செய்து வந்திருக்கின்றது! அவர்களால் இங்கு ஏற்பட்ட நன்மைகள் தான் என்ன?

காங்கிரஸ் கட்சி பதவி ஏற்ற பிறகு இந்தியத் துணைக்கண்டம் வறுமையில் சிக்கி வாடித் தவித்தது தெரியாதா? அதனால் பஞ்சம், பசி, பட்டினி இவற்றால் மடிந்து செத்த மக்கள் தொகையைப்பற்றி தெரியாதா?

காங்கிரஸ் கட்சி நிர்வாகத் திறமையில் வல்லமை பொருந்தியதா? மக்களுடைய வழ்வில் அக்கறை கொண்டதா?

காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலததிலிருந்தே தென்னகம் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது!

வடநாடு வளமெல்லாம் பெற்று வையகம் புகழ வாழ்கிறது! தென்னாடு எலும்புக் கூடாகத் தேய்ந்து ஊர்சிரிக்க நலிந்துக் கிடக்கிறது! இதையெல்லாம் எண்ணிப்பார்த்தீர்களா?

புதுச்சேரி மக்களே! காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த பெரியோர்களே!

"நாடு நலம் பெற வேண்டும், நாட்டு மக்கள் நவ்வாழ்வு அடைய வேண்டும்" என்று சொல்லி ஏழைகளிடமிருந்து வரிகளை வசூல் செய்த கோமான்கள் அந்த வரிப்பணங்களை எப்படி எப்படி பாழாக்கி வருகிறார் என்பதைப்பாருங்கள்.

ஆண்டுதோறும் திறமைக் குறைவால் கோடிக் கணக்கான ரூபாய்களை பாழாக்கி வந்தார்கள். மோசடி, பொய்க்கணக்கு, பித்தலாட்டம்; புனை சுருட்டு இந்த இனங்களால் ஏழைகளின் பணத்தை நாசமாக்கி வந்தார்கள்.

ஆலைகள் கட்டுவார்கள் — அங்கே பதினாயிரக் கணக்கில் மோசடி.

தொழிற்சாலைகள் ஏற்படுத்துவார்கள் — அங்கே இலட்சக் கணக்கில் பித்தலாட்டம்,

மதிப்பின் பெயரால், கௌரவத்தின் பெயரால் ஆடம்பரச் செலவுகள்!

இந்த அநியாயம் ஆண்டுக் கணக்காக தொடர்ந்து கொண்டே வருகின்றது!

இந்த ஆண்டு பாதுகாப்பு இலாக்காவில் நடைபெற்ற அநியாயச் செலவை, கொடுமையான மோசடி, திறமையற்றத் தன்மையை கொஞ்சம் கவனித்துப்பாருங்கள்!

ஒரு அந்நிய சர்க்காரிடமிருந்து வாங்கப்பட்ட கப்பற்படைக் கருவிகள் உபயோகப் படுத்தப் படாமலேயே போய் விட்டன! இந்தக் கருவிகளின் மதிப்பு ஏறத்தாழ 16,58,00 ரூபாயாகும்!

புதுச்சேரி மக்களே! ஏறத்தாழ 17 இலட்சம் பாழ். ஒரு அந்நிய சர்க்காருக்கு கொட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது நியாயமா? நாம் பசியால் துடிக்கிறோம். அவர்கள் 17 இலட்சத்தை பாழாக்கி இருக்கிறார்கள். இவர்கள் வாழ நீங்கள் ஓட்டளித்திருக்கிறீர்கள்? இது முறையா?

பாலைக் குளிர வைத்து நம்மைப் பாதுகாக்கும் சிப்பாய்களுக்கு கொடுக்க கருவிகள் வாங்கினார்களாம், அதுவும் பயன்படவே இல்லையாம். இதன் மதிப்பு 3,80,000 ரூபாயாகும்.

மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளித்த பொதுமக்களே, இது நியாயமா? நமக்குக் கட்டத் துணியில்லை, அங்கே ஏறத்தாழ நான்கு இலட்சம் பாழ். இது நேர்மைதானா? புதுச்சேரி வாக்காளர்களே, கூறுங்கள்!

எங்கேயோ 280 ஏகரா நிலம் கிடந்ததாம்! அது யாருக்கோ சொந்தமாம் அவர்கள் தருவார்களா? தரமாட்டார்களா? என்று தெரிந்து கொள்ளாமலேயே ஒரு திட்டத்தை நடத்த காரியமாற்றத் துவங்கி விட்டார்களாம். முடிவில் அந்த நிலம் கிடைக்கவில்லையாம். ரூபாய் நான்கு இலட்சம்வரை செலவு செய்யப்பட்டிருக்கிறதாம். திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இருந்த பழைய கட்டிடத்தையும் மூடி விட்டார்களாம்.

மக்கள் வாழ்வுக்கு பாடுபடும் கட்சி சர்க்காரை அமைத்திருந்தால் இப்படிக் கண்மூடித்தனமாக ரூபாய் நான்கு இலட்சத்தைப் பாழாக்கி இருக்குமா?

புதுச்சேரி மக்களே இந்த அக்கிரமங்கள் வளரததானா நீங்கள் அவர்களுக்கு ஓட்டளித்தீர்கள்? இது நியாயமா?

டெண்டர்கள் கோரப்படாமலேயே நேரடியான பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு அன்னிய கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு மோட்டார் காரின் உதிரி பகுதிகளை வாங்கினார்களாம். அந்தக் கம்பனியோ ஒப்பந்தம் செய்யபபட்ட தொகைக்கு அதிகமாக, இரண்டு இலட்சம் ரூபாய் பொறுமானமுள்ள உதிரி பகுதிகளை கொடுத்து விட்டதாம். எப்படி இருக்கிறது நியாயம்? கவனித்தீர்களா?

டெண்டர் கோராமல், நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தும் முறைகேடான செயல் இந்த நாட்டில் அல்லாமல் வேறு எந்த நாட்டில்தான் நடைபெறும்.

யார், யாருடன், யார் வீட்டுக் காரியத்திற்காக நேரடிப் பேச்சு நடத்துவது? நேரடியாகப் பேசியது ஏன்? அதனால் இந்த நேரடித் தொடர்பாளர் எததனை இலட்சத்தை சுருட்டினாரோ என்னவோ? யார் கண்டார்கள்.

அநேக இன்ஜினியரிங் பகுதிகளில் மானியங்கள் காலாவதியாவதைமறைக்க கணக்கில் போலியாக போக்குவரத்து செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. திட்டத்திற்கு மேற்பட்ட செலவுகளை மறைக்க பொய் கணக்கு எழுதப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது,

கொள்ளை லாபம் அடிப்பவர்கள், ஏமாத்தித் திரிபவர்கள்,

(7-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

முன் கதைச் சுருக்கம்.

"தென்னகம் விடுதலை பெறவேண்டும், திராவிடம் வடவரின் அடிமைத் தளையை நொறுக்கி எறிந்து தன்னாட்சி பெற வேண்டும்" என்ற இலட்சியமே தன் வாழ்வுப் பணியாகப் பூண்ட வீர பாண்டியன் டில்லி மீது படையெடுத்து செங்கோட்டையில் கொடியைநாட்டி தென்னகத்தின் வீரத்தை, தமிழ் மறவர்களின் ஆற்றலைவிளக்குவதற்கு—இளைஞர்களையும் தமிழ் மறத்திகளையும் கொண்ட வீரப் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு டில்லியை நோக்கிப் புறப்படுகிறான்!

எதிரே ஒரு பெண் ஓடி வந்து விளையப் போகும் ஆபத்தை விளக்கிக் கூறுகிறாள்—பாண்டியனிடம்! பெண்ணின் வார்த்தைக்கு செவி மடுக்காமல் படை புறப்படுகிறது! போலீஸ் பெரிய அதிகாரி அருமை நாயகம் பாண்டியன், வேலழகன், முத்தழகன் முதலியோரைக் கைது செய்கிறார். கைதுசெய்யப் பட்டவர்களைக் காண சிறைச்சாலைக்குச் செல்லுகிறாள் அந்த இலட்சியப் பெண். பாண்டியனைச் சந்தித்து மறுநாள் இரவு பன்னிரெண்டு மணிக்கு அவனை விடுவிப்பதாகக் கூறிச் செல்லுகிறாள்!

பாண்டியனோ 'யார் இவள்? எதற்காக என்னை சந்தித்தாள்? ஏன் விடுதலை செய்யப் போகிறாள்? எனக்கும் இவளுக்கும் என்ன உறவு?" என்றசிந்தனையில் ஆழ்ந்து மனதை குழப்பிக் கொண்டிருந்தான்!

அத்தியாயம் 3.

அந்தி மறைந்தது! ஆதவனின் ஒளியைக் குன்ற வைத்து, வட்ட மதி வானத்து வீதியிலே மேகத்தோடு ஓடி விளையாடிக் கொண்டிருந்தது!

சாலையிலே இருந்த மரங்கள் கிளைகளோடு உராய்ந்து இன்பத் தெம்மாங்கு பாடிக்கொண்டிருந்தன! கூட்டுக்குள் இருந்த பறவை இனங்கள் காமன் கதை பேசி களித்துக் கொண்டிருந்தன! காதல் திருடர்கள் களவாடிய பொருளோடு சோலையை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்! வீட்டுச் சோறு பிடிக்காமல், தாங்காதபசியோடு ஓட்டலை நாடி நடந்து கொண்டிருந்தனர் சிலர்! சீமான்கள் வீட்டிலோ சுந்தரக் கன்னங்கள், முத்துப் பற்கள் கொடுத்த பரிசுகளைப் பெற்றுக் கொண்டே இருந்தன!

இன்பம்! இன்பம்! உலகமே இன்பத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தது!

சித்தாடை கட்டியபெண்ணைப் போல் சிற்றருவி சிலுசிலுவென்று ஓடிக்கொண்டிருந்தது!

செந்தாழை மடலைப்போல் வேல் விழியை தன் உடலால் மூடிக் கொண்டிருந்தான்!

"என்னத்தான் இது?"

'குளிருமல்லவா? அதனால் கனப்பு மூட்டுகிறேன்!"

"கனப்பு அதிகமானால் உடலை சுட்டு விடுமே அத்தான்?"

"உடலை சுட்டால் உடனே வைத்தியம்!"

'என்ன வைத்தியமாம்?"

"இது தான் வைத்தியம்..."

"விடுங்கள் அத்தான்" வேல்விழி கன்னத்தைத் துடைத்துக் கொள்கிறாள்!

"வைத்தியம் எப்படி?"

"ஒரு வியாதிக்கு வைத்தியம் செய்தால் மற்றொரு வியாதியல்லவா வருகிறது?"

"அதென்ன வியாதி வேல் விழி?"

'பைத்தியம்?"

"அதற்கும் மருந்துண்டு! தரட்டுமா?"

"ஐயா! வைத்தியரே! எனக்கு வைத்தியமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்! ஆளை சும்மா விட்டால் போதும்!"

"வேல்விழி! இன்னும் ஒரே ஒரு முறை!"

"வேண்டாம், வேண்டாம்! அது ஒரு விசித்திரமான வியாதியை உண்டாக்கி விடப் போகிறது?"

"அதெல்லாம் முடியாது வேல் விழி!"

வேல்விழி மீண்டும் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு—'அப்பா இது என்ன என்று கேட்டால் என்ன சொல்லுவது?'

"பாண்டியன் பரிசு என்று சொல்லு!"

"பாண்டியன் பரிசா?"

"பாரதிதாசன் எழுதிய புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன் நீங்கள் கூப்பிடுவதுபோல் ஒரு குரல் கேட்டது, அலறிக் கொண்டு ஓடி வந்தேன், இருட்டில் வழி தெரியவில்லை, சுவற்றில் மோதிக் கொண்டேன், அதனால் கன்னத்தில் காய மேற்பட்டது என்று சொல்லேன்!

"ஏனத்தான், இப்படியெல்லாம் பேச எங்கே கற்றுக் கொண்டீர்கள்?"

"இங்கேதான்!"

"போதும் போதும் விடுங்கள்!" வேல்விழி கடிந்து கொள்வதுபோல் பாசாங்கு செய்தாள்!

"கோபமா வேல்விழி"

"ஆமாம்! கோபந்தான்!"

"இல்லை! நீ, பொய் சொல்லுகிறாய்?"

"ஆமாம்! இவரிடம் பொய் வேறு சொல்லுகிறேன்! சத்தியமா கோபம்தான்!" வேல்விழி முகத்தைத் திருப்பிக்கொண்டு உட்காருகிறாள்!

"கண்ணல்ல! கொஞ்சம் திரும்பிப் பாரு!"

"முடியாது!"

"திரும்பம்மா!"

"முடியாது! முடியாது!"

"என் மீது என்ன கோபம் வேல்விழி?'

'அதுவும் சொல்ல முடியாது!'

"அப்படியானால் நான்போகட்டுமா?" அவன் எழுந்து நடக்க ஆரம்பித்தான்!

"அத்தான்! அத்தான்!' வேல்விழி உரக்கக் கத்தியே விட்டாள்!" அத்தான்!" மறுபடியும் கத்தினாள்! "பாண்டியா என்னை விட்டுப் போகாதே! பாண்டியா என்னை விட்டுப் போகாதே!" வேல்விழி படுக்கையிலிருந்தபடி உளறினாள்!

"கண்டதெல்லாம் கனவு தானா? இந்தக் கனவு நனவாகுமா?" வேல்விழியின் முகம் வாடிக் கிடந்தது! அவளது உள்ளமோ எங்கெங்கோ தாவிக் கொண்டிருந்தது!

"வேல்விழி! வேல்விழி!" கதவு தட்டப்பட்டது! நடுங்கி ஒடுங்கி எழுந்து போய் கதவைத் திறந்தாள்! அருமை நாயகம் துப்பாக்கியும் கையுமாக உள்ளே நுழைந்தார்! அருமை நாயகத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது!

"அப்பா! என்ன இது? ஏன் கோபமாக இருக்கிறீர்கள்?" வேல்விழி தன் தந்தை அருமை நாயகத்தைப் பார்த்துக் கேட்டாள்!

"போ! வேல்விழி போ!" என்று கத்தினார் அருமைநாயகம்!

வேல்விழி சிந்திக்க ஆரம்பித்தாள்! "அப்பா...ஒரு வேளை..

சேச்சே! இருக்காது! மதுவிலக்கு சட்டம்தான் அமுலில் இருக்கிறதே!' தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தாள்!

"பாண்டியா! நீயே என் தெய்வம்!" அருமைநாயகம் ஆவேசம் வந்தவரைப் போல் குதிக்கிறார்!

"என்னப்பா உளறுகிறீர்கள்?"

"உளரவில்லை! பாண்டியன் தான் எனக்குக் கண்கண்ட தெய்வம்!"

"பாண்டியன் கண்கண்ட தெய்வமா?" வேல்விழியின் முகத்திலே ஆச்சரியக் கோடுகள் அங்கும் இங்கும் படர்கின்றன!

"பாண்டியன் தான் நான் வணங்கும் தெய்வம்!"

"அப்பா! அவர் பொல்லாதவராயிற்றே!"

"அப்படிச் சொல்லாதே! உன் அப்பாவின் வாழ்வை உயர்த்த வந்த உத்தமன் அவன்!

"என்னப்பா இது! ஒன்றுமே விளங்கவில்லையே!"

"நாளை மறுதினம் பாண்டியனுடைய வழக்கு நீதிமன்றத்திற்கு வருகிறது! அவன் தண்டிக்கப்பட்டால் — சாதாரண அருமைநாயகம்—ஐ ஜீ. அருமை நாயகம் ஆவார்!"

"அப்பா! என்ன இது? துடித்து அலறினாள்!

"என்ன வேல்விழி? ஏன் அப்படி அலறுகிறாய்?

"ஒன்றுமில்லை அப்பா! ஐ. ஜீ. யானால் ஆபத்து அதிகமாகுமே என்று நினைத்தேன், அலறி விட்டேன்!"

"பைத்தியக்கார பொண்ணு நீ!"

"பாண்டியனுக்கு நிச்சயமாகத் தண்டனை கிடைக்குமென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?' 'வேல்விழி உண்மையைத்தெரிந்து கொள்ள ஆசைப்பட்டாள்!

"ஏன் தெரியாது! நான் தானே அவன்மீது குற்றங்களைச் சாட்டி இருக்கிறேன்! தியிட்டான், கொள்ளையடித்தான், கொலை செய்ய முயற்சித்தான், அரசாங்கத்தை கவிழ்க்க முயன்றான் என்ற குற்றங்களை சுமத்தியது நான் தானே வேல்விழி!"

"அப்பா! பொய் சொல்லுவது பாபமல்லவா"?

"பாபம் என்று நினைத்தால் நான் போலீஸ் அதிகாரியாகவும் வந்திருக்க முடியாது! நீயும் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றிருக்க முடியாது!

"இந்தக் குற்றங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும்?"

"ஆறு வருட கடுங்காவல் தண்டனையும் கிடைக்கலாம், ஆயுள் தண்டனையும் கிடைக்கலாம், தூக்கு தண்டனையும் கிடைக்கலாம்! அது நீதிபதியின் இஷ்டத்தைப் பொறுத்தது! அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தாலும் எனக்கு உத்தியோக உயர்வு மட்டும் நிச்சயம்!

வேல்விழி ஒன்றுமே பேசவில்லை! படுக்கைக்குச் சென்று மலைபோல் வீழ்ந்தாள்! அவள் கண்களிலிருந்து பெருகி வந்த கண்ணீர் கன்னப் பாறையில் நீர் வீழ்ச்சியாகி கீழே வீழ்ந்து கொண்டிருந்தது!

ஆந்தையின் அலறலும், கோட்டான் கத்தும் சப்தமும் வேல்விழியின் உள்ளத்தை உடைத்துக் கொண்டே இருந்தன! ஆம்! நடுநிசி அமைச்சர்கள் ஒலிக்கும் இந்த சோகக் குரல் வேல்விழிக்கு சாவுக் குரலாகவே இருந்தது!

அத்தியாயம்-4

கும்மிருட்டு ஆட்சி புரிந்து கொண்டிருந்த உலகத்தை உதய சூரியன் விரட்டிக் கொண்டிருந்தான்! ஆனால் வேல்விழியின் உள்ளத்தில் மட்டும் இருள் நீங்கவில்லை!

பொட்டிழந்த நெற்றியோடும், பூவில்லா விரித்த தலையோடும் காட்சியளிக்கப்பட்டாள்!

என்னதான் அரக்க உள்ளம் படைத்தவனாய் இருந்தாலும் பெத்த மனம் பித்தல்லவா! அருமை நாயகம "என்னம்மா உடம்பிற்கு"? என்று விசாரித்தார்!

"ஒன்றுமில்லையப்பா!" வேல்விழியின் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது!

"சொல்லம்மா!" அருமைநாயகம் பரிவோடும், பாசத்தோடும் விசாரித்தார்!

"அம்மாவின் ஞாபகம் வந்தது! அதனால்தான்...

நாம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்! நான் இருக்கிறேன் கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறிவிட்டு அருமை நாயகம் மனித வேட்டையாட ஆபீசுக்குப் புறப்பட்டார்!

வேல்விழி எதையோ பறிகொடுத்தவள் போல் தனிமையில் உட்கார்ந்திருந்தாள்!

"சின்னம்மா! என்னம்மா உங்களுக்குக் கவலை?" என்று விசாரித்தபடியே வேலைக்கார முனியன் உள்ளே நுழைந்தான்!

"ஒன்றுமில்லை முனியா! பெரியம்மா ஞாபகம் வந்தது!"

"இந்த முனியன் இருக்கிறவரையில் உங்களுக்கு எந்தக் குறைவும் வராது! கவலைப்படாதிங்கம்மா!"

"முனியா! உனக்காவது மனித உள்ளம் இருக்கிறதே— அது நான் செய்த பாக்கியம் தான்!"

"அப்படியெல்லாம் சொல்லாதிங்க அம்மா! நீங்க சீமான் வீட்டுக் குழந்தை! நான் ஏழைங்க!"

"கடவுள் படைத்தபடைப்பில் ஏழை பணக்காரன் என்றவித்தியாசம் ஏது முனியா?"

"நீங்க ஒண்ணு! கடவுளாவது மண்ணாங்கட்டியாவது!"

"என்ன முனியா! உனக்கு கடவுள் மீது நம்பிக்கையில்லையா?"

"கடவுளை நம்பி என்னம்மா செய்ய முடியும்? ஏழைகளுக்கு உழைத்தால் தானே சோறு?"

"உண்மைதான் முனியா! அதிருக்கட்டும் நீ கடவுள் இல்லை என்று சொல்லும்கட்சியை சார்ந்தவனோ?"

"ஆமாம், அம்மா! இதை ஐயாவிடம் சொல்லிவிடாதீர்கள்!"

"உனக்கு பாண்டியனைத்தெரியுமா?"

"ஐயோ அம்மா! பாண்டிய ஞாபகத்தை எனக்கு நினைவூட்டாதிங்க அம்மா!"

"ஏன் முனியா?"

"அந்த உத்தமனின் இன்றைய நிலையை நினைத்தா என் மனசே வெடிச்சுடும் அம்மா!"

"அவர் அவ்வளவு நல்லவரா?"

"அவர் ஏழைகளுக்கு உழைத்திடும் உத்தமர் அம்மா!"

"அப்படியா?"

"ஆமாம், அம்மா! ஆமாம்!

"அவர் சிறையிலே வாடிக் கொண்டிருக்கும்போது நீங்கள் சும்மா இருக்கலாமா?"

"என்னம்மா எங்களால் என்ன செய்ய முடியும்? நாங்கள் ஏழைகளாயிற்றே!"

"அவரை எப்படியும் விடுவித்தாக வேண்டும் முனியா! அதற்கோர் வழி சொல்லு! என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்!

(முனியனிடம் வேல்விழி ஏதோ ரகசியம் சொல்லுகிறாள்! முனியனும் "அப்படியே செய்கிறேன் அம்மா" என்று கூறி புறப்படுகிறான்!

அத்தியாயம் 5

கிழக்கின் விளம்பிலே புறப்பட்ட உதய சூரியன் சரியாக நடு வானத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான்! வெளியே சென்றிருந்த முனியன் ஒரு நாற்பது வயது 'இளைஞ'ரோடு உள்ளே நுழைந்தான்! வேல்விழியும் 'வாங்க! வாங்க' என்று இருகரம் கூப்பி வரவேற்றாள்! வந்தவரும் 'நமஸ்காரம்' என்று சொல்லி அமர்ந்தார்!

"இவர்தான் ஆதூர் ஜமீன்தார்! பெயர், குணசேகரம் பிள்ளை"!

"அதெல்லாம் ஒன்றுமில்லிங்க! ஜமீன் பட்டமெல்லாம் ஒழிஞ்சு போச்சு, சாதாரண குணசேகரம் தான்!',

"பரவாயில்லை! அதனால் என்ன?" உங்களுக்குக் கிடைத்திருக்கிற நஷ்ட ஈடு தொகைதான் பத்து தலை முறைகளுக்குக் காணுமே!" என்று வேல்விழி கிண்டலாக சொல்லுகிறாள்!

"ஆமாம், ஆமாம்!" குணசேகரம் பிள்ளை தலையை அசைக்கிறார்!

"வேலைக்கார முனியன் உங்களைப் பற்றி விவரமாகச் சொல்லி இருக்கிறான்!"

"என்ன சொன்னான்? என்ன சொன்னான்?" அரை பைத்தியம் குணசேகரம் பிள்ளை வாயைப் பிளந்துக்கொண்டு பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருந்தது!

"நல்லவர், உத்தமர், பெரும் பணக்காரர், அழகுள்ளவர்" என்று சொன்னான்" வேல்விழி எடுப்பாகக் கூறினாள்!

"வேறு ஒன்றும் சொல்லவில்லையா?" குணசேகரம் பிள்ளை வேல்விழியை உத்துப் பார்த்துக் கொண்டே கேட்டார்!

"உங்கள் திருமணத்தைப்பற்றியும் சொன்னான்" வேல்விழியின் பேச்சிலே நையாண்டி கலந்திருந்தது!

"சொன்னானா? சொன்னானா?" கிழட்டு வாலிபர் பல்லெல்லாம் தெரிய சந்தோஷப்பட்டார்!

"சொன்னான்! எல்லாம் விபரமாகவேச் சொன்னான்!" வேல்விழி குத்தலாக பதில் சொன்னாள்!

"உங்களுக்கு சம்மதம்தானே?" கிழடுக்கு கொஞ்சம் வலிபமும் ஏற்பட்டது!

"நான், மந்திரி வேலைப் பார்ப்பவர்களைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்! அப்படி செய்துகொண்டால் தான் எனக்கு வரும் கணவர் உயிரோடு இருப்பார் என்று என்னுடைய ஜாதகத்தில் இருக்கிறது!"

"ஐயய்யோ! அந்த வேலைக்கு நான் எங்கே போறது" குணசேகரம் பிள்ளையின் முகத்திலே அசடு வழிந்தது!

"அந்த மந்திரி வேலையும் நானே வாங்கித் தருகிறேன்" வேல்விழி சிரித்துக்கொண்டே கூறினாள்!

"மந்திரி வேலையா? எனக்கா? அப்படின்னா முதல்லே மந்திரி வேலையை வாங்கிக் கொடு! பிறகு கல்யாணம் செய்துக் கொள்ளலாம்!" குணசேகரம் பிள்ளைக்கு கொள்ளை ஆசை!

"உங்களுக்கு மந்திரி வேலை வேண்டுமென்றால் நான் சொல்லுகிறபடியெல்லாம் கேட்க வேண்டும்".

"நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன்! எனக்கு மந்திரி வேலையை மட்டும் கட்டாயம் வாங்கித் தர வேண்டும்!"

"நீங்கள் தண்டவாளத்தைப் பெயர்க்க வேண்டும், தந்தி கம்பிகளை அறுக்க வேண்டும்?"

"அம்மாடியோ! எதுக்கு?', குணசேகரம் பிள்ளை பேந்தப் பேந்த விழித்தார்!

"நீங்கள் தியாகியாக வேண்டும்! தியாகியானால்தான் மந்திரி வேலை கிடைக்கும்! மந்திரி வேலை கிடைத்தால்தான் நம்முடைய கல்யாணமும் நடக்கும்!"

"காங்கிரஸ்காரர்கள் இப்படியெல்லாம் சொல்லி ஏமாத்தினதுபோல ஏமத்தமாட்டியே!"

"என்மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

"இருக்கு, இருக்கு!" குணசேகரம் பிள்ளை தலையை ஆட்டிக்கொண்டே சொன்னார்!

"அப்படியானால் இன்று இரவே புறப்படுங்கள்!"

"எங்கே வேல்விழி?" குணசேகரம் பிள்ளை பயந்த குரலோடு கேட்டார்!

"ஜெயிலுக்கு!" வேல்விழி மகிழ்ச்சியோடு கூறினாள்!

"நான் தந்திக் கம்பியை அறுத்துட்டு வரட்டுமா?" குணசேகரம் பிள்ளை வீரரைப்போல் பேசினார்!"

8–ம் பக்கம் பார்க்க

இந்தியை எதிர்ப்போம்! தென்னகத்தை விடுவிப்போம்!

சென்னையில் மாணவர்கள் போர் முழக்கம்!

திராவிட மாணவர் மாநாட்டுப் பேச்சு விபரங்கள்!

சென்னை மெமோரியல் மண்டபத்தில் திராவிட முன்னேற்றக் கழக மாணவர் மாநாடு மிகச் சிறப்பானதொரு முறையிலே நடைபெற்றது. மாநாட்டிற்கு திரு. சு. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

மாநாட்டிலே பேசிய பேச்சாளர்கள் அனைவரும் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்று ஆட்சியாளர் கூறுவதை கண்டித்தும், தென்னகத்திலே இந்தி மொழியை புகுத்துவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் பேசினார்கள்.

தமிகத்திலுள்ள எல்லா கல்லூரிகளிலிருந்தும் மாணவப்பிரதிநிதிகள் வந்திருந்து மாநாட்டை சீரும், சிறப்போடும் நடத்தித் தந்தனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளரும். வரவேற்புக் குழுத் தலைவருமான தோழர் டி. கே. பொன்னுவேலு பி. ஏ. அனைவரையும் வரவேற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பொறியல் துறை மாணவர் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்தார்.

கோவை மாநகராட்சி மன்றத் துணைத் தலைவரும், சட்டக் கல்லூரி மாணவருமான தோழர் சு. ஆறுமுகம் பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்.

தலைமையுரை

"மாணவர்கள் அரசியலில் பங்குகொள்ளலாமா? கொள்ளக்கூடாதா?—என்பது பற்றி இந்நாட்டின் தலைவர்களெல்லாம் ஒன்றுகூடி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட நேரத்தில், அண்ணா அவர்களும், 'மற்றக்கட்சிகள் மாணவர்களை அரசியலில் இழுக்காதிருந்தால், தி.மு.கவும் மாணவர்களை இழுக்காது' என ஒப்புதல் தந்தார்.

"ஆனால் இந்த ஒப்பந்தத்தை உருவாக்கிய காங்கிரஸ்காரர்கள் தங்கள் வாக்கைக்காற்றிலே பறக்க விட்டுவிட்டு, மாணவர்களைத் தங்கள் பக்கம் இழுக்கலானார்கள். அவர்களின் சொல்லுக்கும் செயலுக்கும் பெருத்த முரண்பாடு காணப்பட்டது. மேலும் இன்றைய கேரளாவிலே மாணவர்களால்தான் அரசியல் போராட்டம் உருவாகி, ஓர் ஆட்சியையே குலைத்திருக்கிறது.

"மாணவர்கள் தி. மு. க.-வை அதிகமாக ஆதரிக்கிறார்கள். இளைஞர்கள் கூட்டமே தி. மு. க. பாசறையாக இருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டுதானோ என்னவோ காங்கிரஸ் அமைச்சர்கள் 'மாணவர்கள் அரசியலிலே கலந்துகொள்ளக்கூடாது' என்ற சூழ்ச்சித் திட்டத்தை உருவாக்கிவிட்டார்கள். வஞ்சகத்தை நெஞ்சிலே கொண்டு உருவாக்கப்பட்ட இத்திட்டத்தால் திராவிட மாணவர்களின் கரங்கள் கட்டப்பட்டுவிட்டன.

ஆனால் தி. மு. கழகம், ஆட்சிபீடத்தை அடையப்போகின்ற நாள் அதிக தூரத்தில் இல்லை; சென்னைக் கோட்டையிலே கொடி பறக்கப்போகும் நாளும் மிக அண்மையிலேதான் உள்ளது.

"எனவே, ஆட்சியை நிர்வகிக்கத் தகுந்த திறமைமிக்க ஓர் நிர்வாக இயந்திரம் அவசியம் உடனடியாகத் தேவை. அத்தகைய நிர்வாகத் திறமைமிக்க மாணவர்களை உண்டாக்கும் நோக்கமே திராவிட மாணவர் கழகத்தின் முதல் நோக்கமாகும் என்று கூறினார்.

இடைவேளைக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அழகிரிசாமி மாணவர்களின் எதிர்காலம் என்ற தலைப்பில் பேசுகையில் கூறியதாவது:

"இமயத்திலே தமிழன் கொடியை நாட்டிய காலம் உண்டு. வந்தவர்களையெல்லாம் வாழ வைத்தான் தமிழன். வாழ்வற்றவர்களுக்கு வாழ்வளித்த தமிழகம், தரணியிலே தலை நிமிர்ந்து வாழ்ந்த தமிழகம். இன்று தலை நிமிராமல் தாழ்ந்து நிற்கின்றது. இதற்கு காரணம் இன்றைய அரசியல் நிலை.

மாணவர்கள் அரசியலிலே காட்டும் உற்சாகம்தான் ஒரு நாட்டில் உள்ள அரசியல் கட்சிக்கு வலிவையும், பொலிவையும் கொடுக்கும் இருண்ட வீட்டுக்கு ஒரு விளக்கு என்பது போல். பெரிய மலையை தகர்ப்பதற்கு சிற்றுளி ஒன்று போதாதுஎன்று அறிஞர்அண்ணாகூறியது போல் கண்ணிழந்தவனுக்குஒரு கைதடி என்று நாவலர் கூறியது' போல் மாணவர்களும் அரசியலுக்கு அவசியம்தான்.

நமது கோவைச் சீமான் நம்மைப் பார்த்துச் சொல்கிறார், 'திராவிட முன்னேற்றக் கழகம், மாணவர்களை அரசியலுக்கு இழுக்கிறது என்று.

மாணவர்சமுதாயத்தை முதல் முதலில் அரசியலுக்கு இழுத்தது யார்? நீங்களா திராவிட முன்னேற்றக் கழகமா? நீங்கள் அல்லவா மாணவர்களை அரசியலுக்கு இழுத்தீர்கள். வெள்ளையன் ஆண்ட காலத்திலே அன்னியன் ஆட்சி நமக்குத் தேவையில்லை. அவன் மொழியைப் படிக்க வேண்டாம். பள்ளிப் படிப்பினை பகிஷ்கரியுங்கள் புத்தகத்தை வீசியெறிந்து விட்டு பள்ளியை விட்டு வெளியேறுங்கள் என்று சொன்னது யார்? காமராஜரும் கக்கன்ஜீயும் கதர்சட்டைப் போடாத காலத்திலே காந்திஜி அல்லவா இதைச்சொன்னார். நீங்கள் சொல்கிறீர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் 'மாணவர்களை அரசியலுக்கு இழுக்கிறது என்று முதன் முதலில் மாணவர்களை அரசியலுக்கு இழுத்தது நீங்கள் அல்லவா?

பள்ளிகளில் படித்து வந்த மாணவர்களை பள்ளியை விட்டு வெளியேறும்படி சொன்னார். அப்படி வெளியேறிய மாணவர்கள் படிப்பு கெட்டு விடக்கூடாதே என்று தேசியக் கல்லூரி திறக்கப்பட்டது. அண்ணா உத்தர விட்டால் எவ்வளவு மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியேறுவார்கள். வெளியேறிய மாணவர்களுக்கு கல்லூரிகள் மட்டுமா திறக்கப்படும். காமராஜர், கக்கன்ஜீ கண்களும் அல்லவோ திறக்கப்படும்.

அரேபியா, அல்ஜீரியா, துருக்கி போன்ற மேல் நாட்டு சரித்திரங்களைப் புரட்டிப் பார்க்கும் போது மாணவர்கள் அரசியலிலே இரண்டறக் கலந்து கொண்டுள்ளதாகப் பார்க்கிறோம்.

நிதியமைச்சர் சொல்கிறார் திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்துகிறது என்று ஆனால் அதே நேரத்தில் சமீபத்திலே கேரளத்திலேஅரசியல் கட்சிகள் மாணவர்களைஅங்கு நடைபெற்ற அரசியல் கிளர்ச்சியிலே ஈடுபடச் செய்ததே இதைப் பற்றி நமது

(7-ம் பக்கம் பார்க்க)

உதவி தாரீர்! உதவி தாரீர்!

கருநாடக
திராவிட முன்னேற்றக் கழகம்
பொதுமக்கட்கோர் வேண்டுகோள்

அன்புள்ளம் கொண்டோரே!

அண்மையில் நம் அருமைக் கருநாடகத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் விளைவால் உயிர்களும், பயிர்களும், பொதுமக்கட்குரிய ஏனைய சொத்துக்களும் பாழாயின. நூற்றுக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தால் அழிந்தன. இக்கோரச் சம்பவத்தின் விளைவால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து வாசலிழந்து அனாதைகளாக அல்லலுறுகின்றனர்.

கருநாடக திராவிட முன்னேற்றக் கழகம் இப்பெரும் சேதத்திற்குள்ளான பெருமக்கட்கு ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்கிக் கொள்கிறது! வெள்ளத்தின் விளைவால் வாடும் மககட்கு, மைசூர் மாநில அரசாங்கம் புரிந்த உதவி போதாதென்று கருதுகின்றது. கருநாடக தி மு. கழகம் அனாதைகளாக அல்லலுறும் அவர்தம் துயர் துடைக்க நல்லதோர் தொகையளிக்க முடிவு செய்திருக்கிறது.

எனவே கழக உறுப்பினர்களும், அனுதாபிகளும், பொதுமக்களும் இயன்றளவு நிதியை அவ்வவ் வட்டத்திலுள்ள கிளைக் கழகச்செயலாளர்களிடமோ அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கோ அனுப்புதல் வேண்டுமென விழைகிறோம். வசூலாகும் தொகையனைத்தும் சிறப்புக்கூட்ட நிகழ்ச்சியொன்று ஏற்படுத்தி நமது மாநில முதலமைச்சரிடம் அளிக்கப்படும்.

வாடிக்கிடக்கும் மக்கட்கு வாழ்வளிக்க
வாரி வழங்குவீர் !

எஸ். வி. பதி,
செயலாளர், கருநாடக தி. மு. க.,
எண் 53, புதிய கலாசிபாளையம் விரிவு, பெங்களூர்-2.

கோவைச்சிங்கம், கொங்கு நாட்டுத்தங்கமாகிய கனம் சுப்ரமணியம் ஏதாவது சொல்லியிருப்பாரா? அவரது நா அசைந்ததா? என்று கேட்கிறேன். நிதியமைச்சர் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்று ஏன் சொல்கிறார். காரணம் மாணவர்களின் ஆதரவு அவரது கட்சிக்கு தற்போது கிட்டவில்லை. மாணவர்கள் பெரும்பாலோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியலிலேதான் பங்கு கொள்ள விரும்புகின்றனர். நாடுகின்றனர் இதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாகவே அமைச்சர் சுப்ரமணியம் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடக்கூடாது என்று சொல்கிறார்.

எந்தமந்திரியைப்பார்த்தாலும் அண்ணாத்துரைக்கு என்ன தெரியும் என்ன தெரியும் என்று கூறுகிறார்கள். காமராஜர் ஒரு பக்கத்திலே அண்ணாத்துரைக்கு என்ன தெரியும் என்கிறார். கக்கன்ஜீ, ராஜாராம் நாயுடு ஆகியோரும் அண்ணாத்துரைக்கு என்ன தெரியும் என்று கூறுகிறார்கள். இப்படிக் கூறிவிட்டு உடனடியாக தங்களது உடலை ஒரு முறை பார்த்துக்கொள்கின்றனர். காரணம் அண்ணாத்துரையை ஒரு தடவை திட்டி விட்டால் தங்களது உடல் சுற்றளவு சற்று பெருத்திருப்பதாக எண்ணுகின்றனர். இப்படிச் சொல்கின்றார்களே இந்த மந்திரிகள் இவர்களையெல்லாம் ஒன்றாக வரவழைத்து வரிசையாக உட்காரவைத்து நமது அண்ணாவை எதிர் பக்கத்திலே உட்காரவைத்து என்ன அண்ணா உங்களுக்குஎன்ன தெரியும் என்ன தெரியும் என்று சொல்கிறார்களே உங்களுக்குத் தெரிந்தவற்றை கொஞ்சம் சொல்லுங்களேன் என்று சொல்லி நமது அண்ணா பேச ஆரம்பித்தால் இந்த மந்திரிகள் வாய் திறக்குமா அல்லது அவர்களது நாதான் அசையுமா என்று கேட்கிறேன்.

இறுதியாக மாணவர் பட்டாளம் சொல்லடிக்கு சோர்வடையாது, கல்லடிக்கு கலங்காது திராவிட நாட்டு விடுதலைப் போருக்காக தங்களது, அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கோபாலாகிருட்டிணன் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசும் போது இந்திய துணை கண்டத்தின் ஒரு பகுதியாக கேரளாவிலே ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதென்றும், காங்கிரஸ் கட்சி தவிர மற்ற அரசியல் கட்சியிலே மாணவர்கள்கலந்துகொள்வதை ஆட்சியாளர் தடை செய்கின்றனர் என்றும் கூறினர்.

அரசியலும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் ஜெயின் கலேஜைச் சேர்ந்த ஈ. கிருட்டிணன் என்பவர் பேசுகையில் விஞ்ஞானத்திலே நம் நாடு பின் தங்கி விட்டதென்றும் அதிலும் குறிப்பாக தமிழ்நாடு மிகவும் பின் தங்கி விட்டதென்றும் கூறினர். மேலும் அவர் பேசுகையில் விஞ்ஞானி ஒருவன் சாதிக்க முடியாததை அரசியல்வாதி சாதிக்க முடியுமென்றும்கூறினர்.மேலும் பேசுகையில் அறிஞர் அண்ணாவின் ஆணித்தரமான சொற்பொழிவுகளின் காரணமாக மதவாதிகளின் திரை கிழிக்கப்பட்டு திராவிட நாட்டிற்கு உருவம் கொடுக்கப் பட்டுள்ளதென்றும் கூறினர்.

அறிவிப்பு!

'சினிமா டைம்ஸ்' ஆசிரியராக பணியாற்றி வந்த நான், வேறு அலுவல் காரணமாக, 2-8-59 முதல் அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டேன். இதுவரை நல் ஆதரவு அளித்து வந்த பொறுப்பாளர் திரு. ராட்ஜர்ஸ் அவர்களுக்கும், பேரன்போடு கூடிய ஒத்துழைப்பு நல்கி வந்த வாசகப் பெருமக்களுக்கும் திரையுலக வர்த்தகத்துறை நண்பர்களுக்கும் என் நன்றி.

அன்பன்

வி. வெங்கடேசன்

திருமண அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம்.

31-8-59 திங்கள் காலை 7 மணியளவில், தஞ்சையை அடுத்துள்ள திருவேதிகுடியில் எனக்கும், செல்வி அரவிந்த நாயகிக்கும் திருமணம் நடைபெறும். நாவலர் இரா. நெடுஞ்செழியன், M.A, பேராசிரியர் க. அன்பழகன், M.L.A. கே. ஏ. மதியழகன் B.A., இராம-அரங்கண்ணல் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர். நண்பர்கள் வருகை தந்து சிறப்பிக்கவேண்டுகிறேன்.

அன்பன்

சென்னை
25-8-59

மா. செங்குட்டுவன்
"நம் நாடு"

பிறப்பு

8-வது வட்டம் கிரேஸ் கார்டன் மக்கள் மறுமலர்ச்சி மன்ற செயலாளர் C. துரைக்கண்ணு அவர்களின் மனைவியார் பச்சையம்மாள் 17-8-59 காலை 9-15 மணிக்கு ஆண் மகவு ஈன்றெடுத்தார்கள், தாயும், சேயும் நலம்.

பக்தவத்சலம் ராஜினமா செய்வார்!

அழகேசனுக்கு மணிமகுடம் சூட்டுவார்!

நீண்ட நெடுங்காலமாக சூழ்நிலைக்கேற்ற வண்ணம் கருத்துகளையும், மனோ நிலையையும் மாற்றிக்கொண்டு மந்திரி பதவியை வகித்துக் கொண்டுவரும் கனம் பக்தவத்சலம் ராஜினமா செய்வாரென்றும், தான் ராஜினமா செய்து திரு. அரியலூர் அழகேசனுருக்கு மகுடாபிஷேகம் செய்வாரென்றும் நம்பத் தகுந்த அரசியல் வட்டாரங்களில் ஓர் வதந்தி உலாவி வருகிறது!

சில காங்கிரஸ்காரர்கள் வருகிற பொதுத் தேர்தல் வரையிலாவது, "இருந்துவிட்டு போங்கள்" என்று பக்தவத்சலத்திடம் கூறி வருகிறார்களாம்!

சில அமைச்சர்கள் குமாஸ்தாவைப்போல் அலுக்காமல் உழைத்திடும் இவர் ராஜிநாமா செய்து விட்டால் திறமையான ஆட்களைத் தேட வேண்டுமே என்று ஆயாசப்படுகிறார்களாம்!

எல்லா மந்திரி சபைகளிலும் விடாமல் வேலை பார்த்து வந்த மந்திரி பக்தவத்சலத்திற்கு திடீரென்று இந்தத் துறவு மனப்பான்மை ஏற்படக் காரணம் என்ன என்று சந்தேகப்படுகிறார்களாம்!

சிலர் மேலிடத்திற்கு போகக்கூடுமென்றும், சிலர் ஓய்வு பெறவே என்றும் ஜோஸ்யம் சொல்லி வருகிறார்களாம்!

காங்கிரஸ் கட்சி மக்களிடம் செல்வாக்கு இழந்து வரும் நிலையில் இந்த அற்ப ஆயுள் கட்சியில் மந்திரியாக இருப்பதைவிட, சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொண்டு நிரந்தரமாக அமையப்போகும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மந்திரி சபையில் இடம்பெற ஆசைப்படலாம் என்று நாமும் ஒரு ஜோஸ்யம் சொல்லுவது பொருத்தமாக இருக்குமென்றே நினைக்கிறோம்!

எது எப்படி இருந்த போதிலும் பக்தவத்சலம் ராஜினமா செய்யப் போவதும், அரியலூர் அழகேசனுருக்கு முடிசூட்டப் போவதும் உண்மைதான் என்று கூறி வருகிறார்கள்!

நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எத்திப் பிழைப்பவர்கள், வரி கொடுக்க மனமில்லாதவர்கள் தான் பொய்க் கணக்கு எழுதி பித்தலாட்டம் செய்வார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் சர்க்காரின் அலுவலங்களிலேயே, சர்க்காரின் அதிகாரிகளே பொய்க் கணக்கு எழுதி பித்தலாட்டம் செய்வார்கள் என்று நாம் கேள்விப்பட்டதே இல்லை,

இப்படி பொய்க் கணக்கு எழுதி ஏழைகளின் வரிப் பணத்தைஏப்பமிடும்எத்தர்களை வளர்க்கும் காங்கிரஸ் கட்சிக்கா ஓட்டளிப்பது? புதுச்சேரி வாக்காளர்களே, சிந்தனை செய்யுங்கள். நீங்கள் செய்தது நல்ல காரியம்தானா? நாட்டுக்கு நலம் பயக்கும் காரியந்தானா? என்று யோசித்துப் பாருங்கள்.

"இன்று செய்த தவறை நாளைய தினமாவது செய்யாமல் நாட்டுக்கு நல்வாழ்வைத் தேடித் தர முயலுங்கள். தென்னகம் விடுதலைப் பெற பாடுபடுங்கள்" என்று கூறி இந்த மடலை முடித்துக் கொள்ளுகிறோம்.

கே. வி. கே. சாமி [நினைவு] மன்றம் கொழும்பு.

அண்மையில் நடைபெற்ற கொழும்பு கே. வி. கே. சாமி நினைவு மன்ற செயற்குழுக் கூட்டத்தில், மன்றப் பொருளாதாரத்தைப் பற்றியும், செப்டம்பர் திங்களில் மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் நினைவு நாளை சிறப்புடன் கொண்டாடுவதுபற்றியும் விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

விவாதத்தில் மன்றத் தலைவர் அன்புதாசன், செயல்ாளர் மணி பொருளாளர் மதியழகன், பொறுப்பாளர் அருணா துணைச செயலாளர்குமாரசாமி ஆகியோரும் தோழர்கள் சர்தார், திராவிட மணி, கனி, சண்முகவேல், பாயிஸ், சூசைமணி, மொய்தீன் முதலியோரும் கலந்துகொண்டனர். தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியதுடன், ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தி வரும் சொற்பயிற்சிக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. செயலாளர்களின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

Registered as a Newspaper in CEYLON
Regd No. M. 7074
MALAIMANI
PhoneNo. 8?285

கொழும்பு திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்ற 3-வது ஆண்டு விழாவில்

பொதுச்செயலாளர் ஏ. இளஞ்செழியன் முழக்கம்.

கொழும்பு 9-8-59-ம் நாள் பொரளை பௌத்த பெண்கள் கல்லூரி மண்டபத்தில், கொழும்பு திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்ற 3-வது ஆண்டு விழா இலங்கை வானொலி கலைஞர்கள் இன்னிசையோடு ஆரம்பமானது!

விழாவுக்கு தோழர் ஏ. எம். புரட்சியாளன் தலைமை வகித்தார். மா. க கரிகாலன் வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் கே. பி. குணசீலன், எம். எஸ். பாண்டியன், அ. பி. சுந்தரராசன், இரா. சிதம்பரனார் ஆகியோர் வள்ளுவன் முப்பொருளை விளக்கிப் பேசினார்கள்.

இலங்கை தி மு. க. பொதுச் செயலாளர் ஏ. இளஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. தோழர் மா. க. கரிகாலன் பொதுச்செயலாளருக்கு வரவேற்பு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார். வரவேற்புக்கு நன்றியளித்தபோது, கருணாநிதி நாடக மன்றம், பகுத்தறிவுப் பண்ணை நீர்கொழும்பு மறுமலர்ச்சி மன்றம், கொழும்பு மாவட்டக் கழகம், வெள்ளவத்தை கலைக்கழகம் இன்னும் பிற கிளைகள் சார்பாக மலர்மாலை அணிவித்தனர். மக்கள் வாழ்த்தொலிக்கிடையில் பொதுச்செயலாளர் "இலங்கையில் நமது எதிர்காலம்" என்ற பொருளில் மிக உணர்ச்சி ததும்ப விரிவாகப் பேசினார்கள்.

திருவள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தார் எனக்குக் கொடுத்த இந்த மாபெரும் வரவேற்பு என் உள்ளத்தை தொட்டு விட்டது. வள்ளுவன் குறளை நன்காய்ந்து உளம் தோய்ந்த வரவேற்பு நல்கிய இவர்களை பெருமக்கள் என போற்றி எனது அன்பு கனிந்த நன்றியை கூறிக்கொள்வதோடு இம் மன்றம் நன்கு வளர்ந்து நன்நெறி தோழர்களை நாட்டுப் பணிக்கு விளங்க வேண்டுமென வாழ்த்துகிறேன். இலங்கையில் நாம் நமது எதிர்காலத்தை திருவள்ளுவர் நெறி உணர்ந்த தோழர்கள் நல்ல சேவை செய்ய முன்வரவேண்டும். இன்று அவர்களளித்த வரவேற்பிலிருந்து அவாகள் தங்களை தயார்படுத்திக் கொள்கிறார்கள் என்று உணர்கிறேன்.

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், இந் நாட்டின் வளத்திற்கும் மக்கள் நலத்திற்கும் குறிப்பாக மலைநாட்டுத் தமிழ் மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்து உழைத்துள்ளார்கள். பன்னெடுங்காலமாக வாழ்ந்து இந்நாட்டை தாயகமாகக் கொண்டு, நாட்டு வளத்திற்கு அரும்பாடுபட்டு வாடிய வாழ்க்கை நடாத்தும் அவர்களை நாடற்றவன் எனக் கூறி மறப்பதுடன். நாட்டு நலனை புறக்கணிப்பதுமாகும் என்பதைபிரதமருக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

குடி உரிமை என்ற கொள்கையைப் பல ஆண்டுகளாக கூறிக்கொண்டு மலை நாட்டுத் தமிழர் மத்தியில் வாழ்ந்து விடலாம் என்று காங்கிரஸ் கருதுகிறது. காங்கிரஸ் மலைநாட்டார் மத்தியிலிருந்தும் இன்னும் அவர்கள் வாழ்க்கைத்தரம் எந்த ஒரு முன்னேற்றமும் அடையவில்லை. அவர்கள் மிருகத்திலும் கீழ்த்தரமாகவே மதிக்கப்படுகிறார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இ. தி. மு க. மலைநாட்டு மக்களின் மத்தியிலே புரட்சியான ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டியுள்ளதுடன், எதிர்காலத்தில் தி. மு. க. ஒன்றே நல்ல பணி புரியும் என்பதையும் திட்டமாக கூறிக் கொள்ளுகிறோம். இத்தருணத்தில் தி.மு.க. கொள்கைகளை சரியாக தெரிந்து கொள்ளாத பத்திரிகைகள் .தப்பான செய்திகளைப் பிரசுரிக்கின்றன. இதனால் பத்திரிகையின் தரம் குன்றி விடுவதோடல்லாமல, மக்களின் ஆதரவும்குறைந்துவிடும்.

தலைமுறை தலைமுறையாக இங்கிருந்து, இந்நாட்டின் வளத்திற்காக உழைத்து, இந் நாட்டையே தாயகமாகக் கொண்ட மலை நாட்டு தோட்ட தமிழ் தொழிலாளர்களின்பிறப்புரிமையும், அரசியலுரிமையும் மறுக்கப்பட்டு தவிர்க்க முடியாத ஒரு பிரச்சனையாக நினைத்து, ஆட்சியாளர் காலம் கடத்திச் செல்வது விந்தையாக இருக்கிறது. இதனை இலங்கை இந்தியர் பிரச்சனை என்று கருதி நேருவிடம் சென்று தீர்க்க முனைவது பயனற்றதே. இது இலங்கைப் பிரச்சனையாகையால் இங்கேயே ஒரு முடிவை கண்டுவிடலாம், பிரச்சனையை வளர்த்து மீண்டும்மீண்டும் சிக்கலை உண்டு பண்ணாமல் உடனடியாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், இலங்கையின் நல் வாழ்வையும் கருதி மலைநாட்டு தமிழ் தோட்ட தொழிலாளர்களுக்கு குடி உரிமை வழங்க வேண்டும், என்றும் இன்றேல் இலங்கை மிகப் பெரியதோர் சூழ்நிலைக்குள்ளாகும். அதன் காரணத்தால் உண்டாகும் பொருளாதார வீழ்ச்சியால், இலங்கை மக்கள் சீர்குலைந்து ஆட்சியாளர் மீதுள்ள நம்பிக்கை குன்றி விடும்.

அண்மையில் கம்பா பாராளுமன்ற அங்கத்தவர் திரு. எஸ்.டி. பண்டார நாயக்கா தி.மு.க. வும் தமிழரசுக் கட்சியும் இந்நாட்டை கைப்பற்ற திட்டம் வகுக்கிறார்கள் என்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்கள். நான் அவருக்கு சொல்லிக்கொள்வேன், தி. மு. க. வுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் எவ்வித அரசியல் ஒப்பந்தமும் இல்லை, இரண்டும் இரு வேறு கோணங்களில் நிற்பதால் திரு. எஸ். டி. பண்டார நாயக்காவின் கூற்று தவறானது எனவே அவர் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பொதுச் செயலாளர் மேலும் பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தற்கு சிங்களவர், தமிழர் என பாகுபடுத்தி ஒற்றுமையைக் குலைத்து நாட்டின் அமைதியை வீணாக்குவது எண்ணமில்லை. இரு மக்களும் இந்நாட்டின் தேசிய இனங்கள் அவர்களின் நல்வாழ்வில் நாட்டின் புகழ் தங்கியுள்ளது. எனவே, அவர்கள் தங்கள் தங்கள் மொழியுரிமை அரசியல் உரிமை பெற்று நலம் பெறுவதுடன் நாட்டின் பெருமை காக்கப்பட வேண்டுமென்பதே எங்கள் நோக்கம். எனவே சிங்களவர் தமிழர் மத்தியில் நமது நல்லெண்ணத்தைச் சொல்லி நாம் பன்னெடுங்காலமாக இணைந்து வாழ்ந்த இந்நாட்டின் பெருங்குடி மக்கள் எனவே நமக்குள் பிளவை வளர்த்து நமது நாட்டின் புகழைவீணாக்காமல் பெற்ற சுதந்தரத்தை நிலைநாட்ட ஒவ்வொரு இளைஞர்களும் தங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். காலம் நம்மை எதிர்நோக்கி கொண்டிருக்கிறது நமது போராட்டம் நாட்டுக்கு நல்ல பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மக்கள் அச்சம் தவிர்ந்த நல்லதொரு ஜனநாயக நாடாக திகழ வேண்டும் என்று நாட்டின் நலம் பேணி ஐக்கிய இலங்கை உறுவாக்க வாருங்கள் என்று உங்கள் மத்தியில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சுடுகாட்டுச் சாம்பல்

"வேண்டாம், வேண்டாம்! எங்கப்பாவிடம் சொல்லி உங்கள்மீது பொய் குற்றம்சாட்டச் சொல்லுகிறேன்! நீங்கள் ஜெயிலுக்குப் போகத் தயாராக வாருங்கள்!"

ஓ! அப்படியே வருகிறேன்! மந்திரி வேலை நிச்சயம்தானே?

"மந்திரி வேலை மட்டுமல்ல, நம் திருமணமும் நிச்சயம்தான்! சீக்கிரமாக வாருங்கள்!

வெளியே நின்று கொண்டிருந்த முனியன் உள்ளே வருகிறான்!"

"முனியா! வெற்றியடா வெற்றி! போட்ட திட்டம் நிறைவேறிவிட்டது!"

"அப்போ பாண்டியன்"

"இன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு கட்டாயம் வெளியே வந்து விடுவார்!"

"நம்ம எஜமான் ஏதாவது..!"

"ஆமாம்! உங்க எஜமான் கண்ணிலும் மண்ணைத் தூவப் போகிறேன்!

முனியன் சிரிக்கிறான்! அந்த சிரிப்பு வேல்விழியின் உள்ளத்திலே மகிழ்ச்சியைப் பாய்ச்சுகிறது!

அத்தியாயம் 6

"பாண்டியா! பார்த்தாய ?"

"என்ன வேலழகா! எதைப் பார்க்கச் சொல்லுகிறாய்? வெந்தப் புண்ணிலே வேல் பாய்ச்சாதே!"

"உண்மையைச் சொன்னால் உனக்கேன் பாண்டியா கோபம் வருகிறது!"

"நீ என்ன பெரிய உண்மையைச் சொல்லிவிட்டாய்?'

"அந்த வஞ்சகியை நம்பாதே என்று சொன்னேனே கேட்டாயா? அவள் கொடிய துரோகி!"

"அப்படிச் சொல்லாதே வேலழகா! அவள் துரோகியல்ல!"

"அதோ சுவற்றில் மாட்டி இருக்கிற கடிகாரத்தைப் பார்! அது சொல்லும் அவள் கொடிய துரோகி என்று!"

"அவசரப்படாதே வேலழகா! அந்தக் கடிகாரம் அவளை இன்னும் துரோகி என்று குற்றம் சாட்டவில்லை!" பொறுத்துப் பார்! அந்த உத்தமி இன்னும் பத்து நிமிடங்களில் வந்து விடுவாள்" என்றுதான் சொல்லுகிறது!"

சிறைச்சாலை சுவற்றிலே மாட்டி இருந்த கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் பாண்டியன் நின்று கொண்டே இருக்கிறான்! "இன்னும் பத்தே பத்து நிமிடம்தான் இருக்கிறது! அதற்குள் அவள் வந்து விடுவாளா? இந்தக் கொடுஞ் சிறையிலிருந்து மீட்பாளா?' என்று சஞ்சலப் படகிலே கொடுமை என்னும் ஆற்றைக் கடந்துகொண்டே இருந்தான்?

கடிகாரத்தின் முட்கள் காலத்தை அளந்து கணக்கிட்டுச் சொல்லிக்கொண்டே இருந்தது! ஓட்டப் பந்தயக்காரனைப்போல் ஓடிக் கொண்டிருந்த பெரிய முள் "இன்னும் ஐந்தே நிமிடத்தில் உன்னைத் தொட்டுப்பிடித்து விடுகிறேன் பார்" என்று சின்ன முள்ளிடம் சபதம் பூண்டு இரைக்க இரைக்க ஓடிக்கொண்டிருந்தது! பாண்டியனுடைய நெஞ்சிலும் திகில் சூழ்ந்து கொண்டது!

"வேலழகன் சொன்னதுதான் உண்மையோ! அடி வஞ்சகி! நல்லவளைப்போல் நடித்த நாசகாரி" என்று வாய்விட்டே முணுமுணுக்க ஆரம்பித்தான்.

"டாண், டாண், டாண்" என்று பன்னிரெண்டு முறை கடிகாரம் ஒலியைக் கிளப்பி–"பார்! காலத்தை எவ்வளவு சரியாகச் சொல்லுகிறேன்" என்று கர்வத்தோடு டிக் டிக் ஓசையை முழங்கிற்று!

'வரவில்லை, வரவில்லை, அவள் வரவில்லை! என்ன உலகமடா இது!' பாண்டியனுடைய உதடு முணுமுணுத்துக் கொண்டிருந்தது!

"பாண்டியா, பாண்டியா! இதோ வந்து விட்டேன், பயப்படாதே!" என்ற ஒலி முழக்கம் பாண்டியனுடைய செவியில் விடுதலை முழக்கமாக ஒலித்தது! இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். இருவர் கண்களிலும் நீர் ததும்புகிறது? ஏனோ இவர்களுக்கு இந்தப் பாசம்?

(தொடரும்)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ, கல்விப்பிரகாசம் பிரஸ். 404திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை-5
அலுவலகம் 1/35 வாணியர் தெரு. சென்னை-14